
மாலை முரசு
பக்கங்கள் 17+ 03

**முன்னணியின் தேசிய அமைப்பாளர்**

## சுரேஸை இன்று ஐந்து மணிநேரம் துருவிய ரி.ஐ.டி



(கனகராசா சரவணன்)

கொழும்பில் உள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பணியகத்துக்கு இன்று சென்ற தமிழ்த் தேசிய மக்கள் 02

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 05 புதன்கிழமை 22.10.2025 | அதிர்வு 83

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது
இங்கே CLICK செய்யவும்



# வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் சுட்டுக்கொலை!

## அரசின் தேசிய பாதுகாப்பு இதுதானா என்று நாடாளுமன்றத்தில் சஜித் கேள்விக்கணை

மாத்தறை, வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்கிரம சேகர சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இன்று முற்பகல் வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பிரதேச சபைக்குள் வைத்தே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. 02

# சொகுசு பஸ் விபத்தில் மன்னார் இளைஞர் பலி!

## பலர் காயங்களுடன் வைத்தியசாலையில்

(மன்னார் நிருபர்)

கொழும்பில் இருந்து மன்னார் நோக்கி நேற்று செவ்வாய்க்கிழமை இரவு பயணிகளுடன் பயணித்த தனியார் சொகுசு பஸ் ஒன்று மன்னார் – மதவாச்சி பிரதான வீதி, பெரியகட்டுப் பகுதியில் இன்று புதன்கிழமை அதிகாலை விபத்துக்குள்ளாகியதில் 02





# வடக்கு உள்ளூராட்சி ஆணையாளராக சுதர்சன்

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக சா.சுதர்சன், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதத்தை வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் வைத்து ஆளுநர் இன்று புதன்கிழமை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலனும் கலந்துகொண்டார்.

# இளைஞர்களை வன்முறைக்குத் தூண்டும் வகையில் செயற்பட்ட நபரின் வீடு எஸ்.ரி.எவ்வால் சுற்றிவளைப்பு

(பூ.லின்ரன்)

யாழ்ப்பாணத்தில் இளைஞர்களை வன்முறைக்குத் தூண்டும் வகையில் செயற்பட்ட நபர் ஒருவரின் வீடு இன்று பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸாரால் பெற்றுக்கொள்ளப்பட்ட தேடுதல் அனுமதிக்கமைய யாழ்ப்பாணம் – முளவைச் சந்திக்கு அருகில் உள்ள வீடொன்றிலேயே இன்று அதிகாலை இந்தச் சோதனை நடத்தப்பட்டது.

அண்மையில் இளைஞர்களிடம் வன்முறையைத் தூண்டும் வகையில் தனது பிறந்தநாள் கொண்டாட்டக் காணொளியைப் பதிவேற்றம் செய்தமை, சட்டவிரோத சொத்துக் குவிப்பு போன்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் மேற்படி நபரின் வீட்டில் சோதனை நடத்தப்பட்டது.

மேற்படி நபர் வீட்டில் இல்லாத நிலையில் அங்கு இரண்டு மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டதுடன், இரண்டு பேர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## சுரேஸை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணி கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ், முகநூல் புகைப்படம் தொடர்பில் சுமார் 5 மணித்தியாலங்கள் வாக்குமூலம் அளித்த பின்னர் அங்கிருந்து வெளியேறினார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த தர்மலிங்கம் சுரேஸின் வீட்டுக்குக் கடந்த 18 ஆம் திகதி சென்ற பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர், முகநூலில் விடுதலைப்புலிகளின் தலைவர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் ஆகியோர் ஒன்றாக இருந்த புகைப்படத்தைப் பதிவேற்றிய காரணத்தால் அது தொடர்பான விசாரணைக்குக் கொழும்புக்கு வருமாறு கோரி கடிதத்தை வழங்கினர்.

இந்தநிலையில் கொழும்பில் உள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பணியகத்துக்கு இன்று காலை 10 மணிக்குச் சென்ற சுரேஸிடம் சுமார் 5 மணித்தியாலங்களுக்கு மேலாக விசாரணை இடம்பெற்றது.

அதற்கான வாக்குமூலத்தை வழங்கிய சுரேஷ், அங்கிருந்து பிற்பகல் 3 மணிக்கு வெளியேறினார்.

## வெலிகம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேச சபை அலுவலகத்துக்குள் தவிசாளரின் ஆசனத்தில் வைத்து துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான தவிசாளர், மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மோட்டார் சைக்களில் வந்த இருவரே துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இவர் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

“வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் அலுவலகத்தில் இருக்கும் போதே அவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். தனது கடமைகளைச் செய்து கொண்டிருந்தபோது நடத்தப்பட்ட இந்தத் துப்பாக்கிச் சூட்டில் பலத்த காயமடைந்த அவர் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். அரசின் தேசிய பாதுகாப்பு இதுதானா?” – என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் இன்று கேள்வி எழுப்பியுள்ளார்.

## சொகுசு பஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். பறையநாளன்குளம் பொலிஸ் பிரி வில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சாரதியின் நித்திரைக் கலக்கத்தில் பஸ் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் பலர் காயமடைந்த நிலையில் செட்டிக்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் மன்னார், முருங்கன் பகுதியை சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# மன்னார் நகர சபையின் 5 ஆவது அமர்வில் பல்வேறு விடயங்கள் குறித்தும் ஆராய்வு

(மன்னார் நிருபர்)

மன்னார் நகர சபையின் 5 ஆவது கூட்டம் இன்று புதன்கிழமை (22) காலை 10 மணியளவில் நகர சபையின் சபா மண்டபத்தில் நகர சபையின் தவிசாளர் டானியல் வசந்தன் தலைமையில் இடம் பெற்றது. இதன்போது ஏற்கனவே உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகக் கூட்டம் இடம் பெற்றது.

இதன்போது கடந்த கூட்டறிக்கை வாசிக்கப்பட்டு அங்கிகரிக்கப்பட்டது.

தொடர்ந்தும் மன்னார் நகர சபையின் கடந்த மாத செலவினங்கள் சபை உறுப்பினர்களால் அங்கிகரிக்கப்பட்டது. மேலும் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதோடு, நகர சபையின் சொத்துக்களை 2026 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்குவதற்கான அங்கீகாரம், உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது. சபை உறுப்பினர்களின் பூரண ஒத்துழைப்போடு அங்கீகாரம் வழங்கப்பட்டது.



இதேவேளை மன்னார் நகர சபையால் வட்டார ரீதியாக முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களுக்குக் குறித்த வட்டாரங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தி, அவர்களின்பங்குபற்றுதலுடன் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று நகர சபை உறுப்பினர் அன்ரனி டேவிட்சன் சபையில் தெரிவித்தார்.

பல்வேறு வட்டாரங்களில் குறித்த வட்டார உறுப்பினர்களுக்கு தெரியப் படுத்தப்படாமல் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இதனால் பிரச்சினைகள் நிகழ்வதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.குறித்த சபை அமர்வில் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# 5 ஆவது ஹைக்கூ கவியரங்கம் 26இல்

45 ஆவதுஆண்டில் வலம் வந்து கொண்டி ருக்கும் புதிய அலை கலை வட்டம் அதன் இளைஞர் அணி மூலமாக மாதாந்தம் நடத்திவரும் ஹைக்கூ கவியரங்கம் வரும் 26.10.25 மாலை 3. மணிக்கு கொழும்பு-13 இல் அமைந்துள்ள எக்ஸலனஸ் சர்வதேச பாடசாலையில் வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கவியமர்வுக்கு கவித்தலைமை ஏற்கிறார் புதிய அலை கலை வட்டத்தின் மகளிர் அணியின் பொருளாளரும் கொள்கை பரப்புச் செயலாளருமான திருமதி உஷா கெனடி.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு தமது திறமையை வெளிக்கொணர விரும்புவோர் உடன் 075 4880172 என்ற வட்சப் இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம் என அறியத்தரப்படுகின்றது.




## யாழ். போதனா மருத்துவமனையில்

# நீரிழிவுச் சிகிச்சைக்கு விரிவடைந்தது சேவை

யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையின் நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தின் சேவைகள் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தின் சேவைகள் தற்போது வெளிநோயாளர் கட்டடத் தொகுதியின் முதலாம் மாடியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், வெளிநோயாளர் மற்றும் விபத்துச் சிகிச்சைக் கட்டடத் தொகுதிகளுக்கு இடையிலான பகுதியில் இரத்தப் பரிசோதனை மாதிரிகளை வழங்கும் பகுதி இடமாற்றம் செய்யப்பட்டுக் கடந்த சில தினங்களாகச் செயல்படத் தொடங்கியுள்ளது.

இந்த மாற்றத்தின் மூலம் நோயாளிகளுக்கு ஏற்படும் நெரிசல்கள் குறைக்கப்படுவதுடன் பரிசோதனைகளுக்காக இரத்த மாதிரிகளை வழங்கும் நபர்கள் இலகுவாக குறித்த பகுதியில் தேவையான சேவைகளைப் பெறுவதற்கான சூழல் உருவாகியுள்ளது என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.





# யாழ். கோட்டையைச் சுற்றி எல்லைக் கற்கள் நடும் பணி தொடர்பாகக் கலந்துரையாடல்

யாழ். கோட்டையைச் சுற்றி எல்லைக் கற்கள் நடுகை செய்யும் பணி தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

தொல்பொருள் திணைக்களத்தால் எல்லைக் கற்கள் நடுகை செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அது நிறுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் இன்றைய கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

தொல்பொருட் திணைக்களம், யாழ். மாநகர சபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியன இணைந்து எஞ்சிய எல்லைக் கற்களை நடுகை செய்யும் பணிகளை முன்னெடுப்பது என்று இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர், காணி, நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்கள், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர், யாழ். மாநகர சபையின் பொறியியலாளர், தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.



# வறுமையைக் கடந்து கல்வி திட்டத்தில் மாணவருக்கு சைக்கிள்கள் வழங்கல்!





**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு விசுவமடு பிரதேசத்தில் பொருளாதார ரீதியாக பின்னடைவை சந்தித்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் நோக்கில் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. விசுவமடு கிழக்கு அட்டைக்குளம் சிறுவர் பூங்காவில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தவிசாளர் வே. கரிகாலனின் நெறிப்படுத்தலுடன், அன்பாலயம் அமைப்பின் நிதி அனுசரணையோடு தெரிவு செய்யப்பட்ட 15 பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

விசுவமடு கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் வசிக்கும் தூரப்பகுதி மாணவர்கள் கல்வியை இடைநடுவில் நிறுத்தாமல் தொடரவும், போக்குவரத்து சிரமத்தை எளிதாக்கவும் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முழு பணத்தையும் செலுத்திச் சைக்கிள்களைளப் பெற முடியாத குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு, முதற்கட்டமாக அன்பாலயம் அமைப்பின் ஊடாக முழுப் பணமும் வழங்கப்பட்டு, பின்னர் தவணை முறையில் பணம் செலுத்தி முடிக்கும் வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் சுழற்சி முறையில் இடம்பெறவுள்ளது.

தூரப்பகுதி மாணவர்களும் இந்தத் திட்டத்தின் கீழ் பயனடைய வழிவகை செய்யப்படவுள்ளது.

அத்துடன் விசுவமடு கிராம மக்கள், மாணவர்கள், முதியோர்கள், விவசாயிகளுக்கான பல்வேறு திட்டங்கள் எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்கப்படவுள்ளன. அண்மையில் வட்டியில்லா கடன் வழங்கப்பட்டதன் தொடர்ச்சியாக இந்த முறை மாணவர்களுக்கான சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தவிசாளர் வே. கரிகாலன், விசுவமடு ஆரம்ப பாடசாலையின் அதிபர் எஸ். யோகராசா, திட்ட இணைப்பாளர் தீ. அனுஸ்ரியா, மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நீதி மீறல் போக்கு

எப்போதும் சட்ட முறைப்படி, நீதி முறைப்படி நடப்போம், சட்டத்தை மீறுவோர் தண்டிக்கப்படுவர் என்றெல்லாம் முழங்கிக் கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசுத் தரப்பினர் அடிக்கடி சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பில் சிக்கலில் மாட்டிக் கொள்கின்றனர். அத்தகைய சிக்கலில் சட்டத்தரணியான அரசு தரப்பு எம்.பி. ஒருவர் இப்போது மாட்டிக் கொண்டிருக்கிறார்.

அவரது சட்ட விரோத அணுகுமுறையை நாட்டின் நீதியமைச்சரே நியாயப்படுத்துவது போல நடந்து கொண்டிருக்கின்றமைதான் இதில் மேலும் வியப்பான விடயம்.

கொழும்பு நாரஹேன்பிட்டவில் உள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான நிலத்தில் அத்துமீறி வசிக்கும் அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்களின் குழுவிற்கு எதிராக அவர்களை அங்கிருந்து வெளியேற்றும் உத்தரவை நீதிமன்றம் விடுத்திருந்தது.

சமீபத்தில் நடைபெற்ற கொழும்பு திம்பிரிகஸ்யாய பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது இந்த விடயம் எடுக்கப்பட்டது.

நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்த வேண்டாம் என உள்ளூர்ப் பிரதிநிதி ஒருவர் கோரிய போதுதான் சர்ச்சை எழுந்தது.

அப்போது குறுக்கிட்ட ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரான பெண் சட்டத்தரணி லக்மலி ஹேமச்சந்திர, அந்த நிலங்களில் நீண்ட காலம் குடியிருக்கின்ற அந்த மக்களுக்கு வேறு போக்கிடம் இல்லை என்பதால் அந்த நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்துவதில்லை என்றுதானே தீர்மானம் எடுத்திருக்கிறோம் என அங்கு குறிப்பிட்டமைதான் பெரும் விவகாரமாக உருவெடுத்துள்ளது.

நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்துவதில்லை என்ற தீர்மானம் அல்லது அதற்கான முன்னெடுப்பை மேற்கொள்வது நீதிமன்ற அவமதிப்புக் குற்றம் என எதிரணிகள் பிடித்துக் கொண்டுள்ளன. அதை ஒட்டி அவை சர்ச்சையைக் கிளப்புகின்றன.

இது தொடர்பில் எதிரணி உறுப்பினர்கள் நீதிச் சேவை ஆணைக் குழுவிடம் நீதிமன்ற அவமதிப்பு முறைப்பாடொன்றை அளித்துள்ளனர்.

இதற்கிடையில் தமது தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரைப் பாதுகாக்க முனைந்த நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, குடியிருப்பாளர்களை வெளியேற்றும்படி நீதிமன்றங்கள் விடுத்த - நிலுவையில் இருக்கின்ற - எல்லா உத்தரவுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டால் கொழும்பில் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் வீடற்றவர்களாக வீதியில் விடப்படுவார்கள் என்று தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறி இருக்கிறார்.

நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்தத் தேவையில்லை என்று கூறும் சட்டத்தரணி ஒருவர் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க, அவரின் அந்தப் போக்கை நியாயப்படுத்தும் இன்னொரு எம்.பி. நீதி அமைச்சராக இருக்கிறார். நாட்டில் சட்டம், நீதி, நிர்வாகம் உருப்பட்ட மாதிரித்தான்....!




## முத்துநகர் விவசாயிகளது அவலம்:

# ஓய்வின்றித் தொடரும் சத்தியாக்கிரப் போராட்டம்!

**ஹஸ்பர் ஏ ஹலீம்.**

ஈழத்து நாட்டில் தமிழர் தாயகப் பரப்பில் உள்ள தமிழ் பேசும் மக்களின் நில அபகரிப்பு என்பது தொடர்ந்த வண்ணமே உள்ளது.அரச தரப்பில் உள்ள திணைக் களங்களான தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசி பாதுகாப்புத் திணைக் களம், சுற்றுலா பணியகம், இலங்கை துறை முக அதிகார சபை என இவ்வாறாக குறிப்பிட்டு சொல்ல கூடிய நிறுவனங்கள் மக்களின் தனியார் காணிகளை அடாத் தாக அபகரித்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் திருகோணமலை முத்துநகர் விவசாயிகளின் விவசாய நிலங்களும் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் ஏற்பாட்டில் சூரிய மின் சக்தி உற்பத்திக்காக சுமார் 800 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட காணி அபகரிக்கப்பட்டு தனியார் கம்பனிகளுக்கு இரு விவசாய நீர்ப்பாசன குளங்களை மூடி வழங்கப்பட்டுள்ளன.

இதனால் வாழ்வாதாரத்தை இழந்த குறித்த விவசாயிகள் பல வடிவங்களில் போராட்டத்தை பல தடவை நடத்திய போதிலும் எவ்வித சாதகமான முடிவுகளும் எட்டப்படவில்லை. இதனால் மனமுடைந்துபோன முத்துநகர் விவசாயிகள் திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாகத் தொடர் சத்தியாக் கிரகப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த விவசாயிகள் கடந்த கால பல அரசுகள் ஆட்சி செய்த போதிலும் 352 விவசாய குடும்பங்களும் விவசாயத்தை நம்பி பரம்பரை பரம்பரையாக சுமார் 53 வருடங்களாக நெற் செய்கை உள்ளிட்ட விவசாய செய்கையில் ஈடுபட்டார்கள். தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசில் வெளியேற்றப்பட்ட விவசாயிகள் கொழும்பு ஜனாதிபதி செயலகம், பிரதமர் செயலகம் வரை அபகரிக்கப்பட்ட நிலத்தை மீள பெற்றுத்தரக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

போராட்டத்தின் போது அப்பாவி விவசாயிகளை பொலிஸார் கைது செய்து வருகின்ற நிலையில் அன்றாட ஜீவனோபாயமும் பாதிக்கப்பட்டுள்ளது.

குறித்த விவசாயிகளுக்காக தேசிய மக்கள் சக்தி அரசால் அங்கம் வகிக்கும் திருகோணமலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதியமைச்சர் மக்களுக்கு ஆதரவாக மட்டுமன்றி ஏனைய வளச் சுரண்டல்களுக்கு எதிராக கடந்த கால ஆட்சியாளர்களை குற்றம் சாட்டி அரா விலைக்கு இந்திய கம்பனிகளுக்கு தாரை வார்க்கின்றனர் என பேசிய வரலாறுகளும் உண்டு.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போதும் குறித்த கிராமத்தில் தேசிய மக்கள் சக்திக்காக மேடை அமைத்து கொடுத்தவர்களே இதே விவசாயிகள். குறித்த விவசாயிகளின் விவசாய நிகழ்விலும் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் அக்மீமன என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால் போராட்டம் மூலமாக போராடிய ஒன்பது விவசாயிகளை கடந்த வாரம் சீனக் குடா பொலிஸார் கைது செய்து மறு நாள் நீதிமன்றம் ஊடாக பிணை வழங்கப்பட்டது. அகில இலங்கை விவசாய சம்மேளனம், மக்கள் போராட்ட முன்னணி போன்றவர்கள் இவர்களின் சத்தியாக் கிரகப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி வந்த போதிலும் முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்த பல சிவில் அமைப்புக்கள் காணப்படுகிறது. இவ் அமைப்புக்கள் எந்தவொரு அழுத்தமும் அரசாங்க தரப்புக்கு வழங்காமை பெரும் குறைபாடாக உள்ளது.

பிரதமர் ஹறிணி அமர சூரிய இரண்டாம் கட்டமாகத் தீர்வைப் பெற்றுத்தருவதாகக் கடந்த 20 ஆம் திகதிவரை வாக்குறு வழங்கியுள்ளார். ஆனாலும்

தொடர்ச்சி▼





# ஓய்வின்றித் தொடரும் சத்தியாக்கிரப் போராட்டம்!

தொடர்ச்சி▲

சாதகமான தீர்வு கிடைக்கவில்லை.

அப்பாவி விவசாயிகளின் கோரிக்கை அடங்கிய மகஜராக "விவசாயிகளிடம் இருந்து கொள்ளையடித்து கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட முத்துநகர் விளை நிலங்களை உடனடியாக திருப்பி கொடு போன்ற பிரதான பதாகையை ஏந்திய வாறும் போராடி வருகின்றனர்.

இது தொடர்பில் முத்து நகர் ஒன்றிணைந்த விவசாய சம்மேளன செயலாளர் திருமதி எஸ்.சஹீலா தெரிவிக்கையில்,

"எவ்வித சாதகமான பதிலும் எங்களுக்கு கிடைக்கவில்லை 352 விவசாயிகளின் 800 ஏக்கர் நிலங்களை அபகரித்துள்ளனர். சுமார் 53 வருடங்களாக விவசாயம் செய்து வந்தோம் இதற்காக எங்களுக்கு மாற்று நிலமாவது தர வேண்டும். மேலும் முத்து நகர் விவசாய காணியை அண்மித்த காணிகளை தனியார் நிலங்கள் என ஏழு உரிமையாளர்கள் 272 ஏக்கருக்கும் மேற்பட்டவற்றை உரிமை கோருகின்றனர். இதில் தனியார் காணி எனக் கூறிப் பொய்யாக உறுதிகளை வழங்கித் தாரை வார்த்துள்ளனர். இது தொடர்பில் காணித் திணைக்களம் அரசாங்கம் ஊழல் மோசடி தொடர்பில் கவனம் எடுக்க வேண்டும். இது தொடர்பில் அண்மையில் எங்கள் விவசாயிகள் ஒன்பது பேரை கைது செய்துள்ளனர். அவர்களின் மோட்டார் சைக்கிள் இயந்திரம் வழங்கப்படவில்லை .

இவர்களின் காணி உரிமங்களை பரிசீலனை செய்ய வேண்டும். இதில் ஊழல் மோசடி இடம் பெற்றுள்ளது எனவும் தெரிவித்தார்.

அரசு விவசாயிகளின் பிரச்சினைகளை கண்டு கொள்ளாமலும் தீர்வு வழங்காத நிலையிலும் செயற்படுவதாக இப் போராட்டத்தை வைத்து பார்க்கும் போது புலனாகிறது. ஆட்சிக்கு மாறி மாறி வருகின்றது அரசு. எந்தவொரு அரசாக இருந்தாலும் சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வின்றிய நிலை காணப்படுகிறது.

1972 களில் இருந்து அப்போதைய அரசு முத்து நகர் விவசாயிகளை வெளியேற்றாத போது தற்போதைய அநுர அரசு இந்திய கம்பனிகளுக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் விவசாய நிலத்தை வழங்குவது எந்தளவுக்கு நியாயம் என விவசாயிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம், நாடாளுமன்றம் என்று விவசாயிகளின் பிரச்சினைகளைப் பேசிய போதிலும் ஆளும் தரப்பினர் கண்டு கொள்ளாமல் காலத்தைக் கடத்தி வருகின்றனர்.

இதனால் குறித்த விவசாயிகளின் ஜீவனோபாயமாக விளங்கும் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் விதைப்பு நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய காலம் உள்ளது.

இது குறித்து விவசாயி ஒருவர் தெரிவிக்கையில்,

"விவசாய நிலங்களை பெற்றுத் தரக் கோரியே போராடிகிறோம். கருத்து சுதந்திரத்தை கூட பிரயோகிக்க முடியாத நிலையில் பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளானோம். அப்பட்டமான பொய் குற்றச்சாட்டை முன்வைத்து எங்களை பொலிஸார் கைது செய்கிறார்கள். எங்கள் விளை நிலங்கள் எங்களுக்கு வேண்டும்" என தெரிவித்தார்.

இந்த விவசாயியின் மனைவி கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் திருகோணமலை மாவட்ட செயலகம் முன் இடம் பெற்ற கவனவீர்ப்பின் போது பிரதம பொலிஸ் பரிசோதகர் ஒருவரால் தூக்கி வீசப்பட்டார். இதனால் தொடர்ச்சியாக பல நாள்களுக்கு கையை தூக்க முடியாத அளவுக்கு காயமடைந்துள்ளார். பின்னர் ஓரிரு நாள்களின் பின்னர் குணமடைந்து தற்போது சத்தியாக் கிரகப் போராட்டத்திலும் ஈடுபடுகிறார்.

குறித்த பெண்ணை தாக்கிய பொலிஸ் உயரதிகாரி வடக்கில் உள்ள தலைமையகப் பொலிஸ் நிலையமொன்றுக்கு தலைமை பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

தேர்தல் காலங்களில் மாத்திரம் மக்கள் வாக்குகளை பெறுவதற்காக பல பொய் வாக்குறுதிகளையும் உபாயங்களையும் கையாளும் அரசியல் பிரதிநிதிகள் தேர்தலின் பின் மக்கள் வாக்குகளை விற்பனை செய்யும் நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

எனவேதான் விவசாய நிலத்தை – அபகரிக்கப்பட்ட குறித்த தொகை ஏக்கர் நிலங்களை உரிய விவசாய குடும்பங்களுக்கு வழங்க வேண்டும் என்பதே அவர்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாகும்.





# அட்டாளைச்சேனை பிரதேசத்தில் மினி சூறாவளி

(றிபாஸ்)

சீரற்ற காலநிலைக்கு மத்தியில் நேற்று மாலை அட்டாளைச்சேனை பிரதேசத்தில் வீசிய மினி சூறாவளித் தாக்கத்தினால் அட்டாளைச்சேனை பொது மையவாடி மற்றும் மீலாத் நகர் பகுதியிலும் சுற்று மதில்கள், தகட்டு வேலிகள், வீட்டின் கூரைகள் என்பன உடைந்து சேதமடைந்துள்ளன.

நேற்று மாலை 5.00 மணியளவில் வீசிய மினி சூறாவளியினால் அட்டாளைச்சேனை 6 ஆம் பிரிவில் அமைந்துள்ள பொது மையவாடியின் சுற்று மதில்கள் முற்றாக உடைந்து சேதமடைந்துள்ளன. அதேபோன்று மீலாத் நகரில் உள்ள குடியிருப்பாளர்களின் சுற்று மதில்கள், தகட்டு வேலிகள், வீட்டின் கூரைகள் என்பனவும் உடைந்து பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளன.

தற்போது இப்பிரதேசங்களில் மாலை நேரங்களில் காலநிலை மாற்றம் ஏற்பட்டு வருவதுடன் காற்றுடன் கூடிய மழையும் பெய்து வருகின்றது.

இதேவேளை, சேதங்கள் பற்றிய விவரங்கள் தொடர்பில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக அதிகாரிகள் ஊடாக மாவட்ட அரசாங்க அதிபருக்கும், அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளன. பிரதேச செயலாளர் நேரில் சென்று பார்வையிட்டமையுடன் மேலதிக நடவடிக்கைகளை எடுத்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மன்னாரில் காற்றாலைத் திட்டம் :

# இயற்கை வளங்கள் மக்கள் வாழ்வுக்கு அபாயமா...?



மன்னார் மாவட்டமானது, இலங்கையின் வடமேற்குப் பகுதியிலுள்ள செழிப்பான இயற்கை வளங்களாலும், கடல் வளங்களாலும், பறவைகள் புலம்பெயர்ச்சி மற்றும் மீன்பிடிப்புத் துறை வளர்ச்சியால் அறியப்படும் பகுதி ஆகும். இந்தப் பகுதியில் மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தைக் கடல் மற்றும் புலம் சார்ந்த இயற்கை வளங்களில் இருந்து முழுமையாக பெறுகின்றனர். சமீபத்தில் மன்னாரில் அரசால் காற்றாலை அமைக்கும் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதன் பின்னணி, நாட்டின் மின்சார தேவையை பூர்த்தி செய்வது என்ற நோக்கத்துடன் உள்ளது. ஆனால், இதன் எதிர்கால தாக்கங்கள் குறித்தும் மக்கள் அதிர்ச்சியுடன் இருக்கிறார்கள்.

காற்றாலை திட்டம் நாட்டுக்குக் குறைந்தக் கார்பன் மின்சாரம் வழங்கும் முன்னேற்றமாகக் கருதப்படுகின்றது. இதன் மூலம், எண்ணெய் மற்றும் துறைகளின் பயன்படுத்தும் மின்சாரத்தை குறைத்து, சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைத்துக் கொள்ள முடியும். பொதுவாக, உலகில் காற்றாலை நிறுவல் துறைகள் பசுமை சக்தி வளர்ச்சிக்கான ஒரு முக்கிய அம்சமாக கருதப்படுகின்றன. ஆனால், மன்னாரின் தனித்துவமான சூழல் மற்றும் மக்கள் வாழ்வின் சாரமான இயற்கை வளங்களுக்கான பாதிப்புகள் மிகவும் கவலைக்குரியவை என்றே சொல்லலாம்.

மன்னார் கடல்மேல் அமைந்துள்ள இடமாகும். இந்தப் பகுதியில் பறவைகளின் புலம்பெயர்ச்சி, கடல் மீன்பிடி மற்றும் நுண்ணுயிரியல் வளங்கள் என்பன உள்ளன. காற்றாலை கட்டமைப்புகள் மூலமாக குறிப்பாக வான் கோபுரங்கள் அமைத்துக் கொள்வதன் ஊடாக, சில பறவைகள் மற்றும் உயிரினங்களின் இயற்கை வாழ்விடம் குறைய வாய்ப்பு உள்ளது. நிலத்தடி நீர் மண்டலம் பாதிக்கப்படலாம், மண் முறைப்பாடு மற்றும் நிலச்சரிவுக்கு பாதிப்பு உண்டாகும் அபாயம் உள்ளது. இதன் மூலம், மீன்பிடிப்புத் துறை, விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த வாழ்வாதாரம் பாதிக்கப்படலாம்.

மன்னார் மக்கள் இதற்குத் தங்கள் எதிர்ப்பையும் கருத்தையும் வெளிப்படுத்தி வருகின்றனர். அவர்கள் கூறுவது, காற்றாலை திட்டம் சுற்றுச்சூழல் ஆய்வுகள் முழுமையாக செய்யப்படாமல் செயல்படுத்தப்படும் போது, அவர்கள் வாழ்க்கை முறைகள் மற்றும் சமூக அமைப்பு பாதிக்கப்படும் என்பதாகும். குறிப்பாக, பறவைகள் மற்றும் மீன்களுடன் தொடர்புடைய தொழில்கள் நேரடியாக பாதிக்கப்படலாம். இதனால், உணவு பாதுகாப்பு, வருமானம் மற்றும் சமுதாய நலன் குறைய வாய்ப்பு உள்ளது.

அரச மற்றும் திட்டப் பொறுப்பாளர்கள் கூறுவது, இந்தக் காற்றாலை திட்டம் நாட்டின் மின்சார தேவையை பூர்த்தி செய்து, புதுமையான தொழில்நுட்ப வளர்ச்சிக்கான வாய்ப்புகளை உருவாக்கும் என்பதாகும். ஆனால், மக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அழுத்துவது, முறையான சூழல் பாதிப்பு ஆய்வு, மக்கள் கலந்துரையாடல் மற்றும் நீண்ட கால பின்விளைவுகள் மதிப்பீடு இல்லாமல் திட்டத்தை முன்னெடுத்தால், அது மன்னாரின் இயற்கை வளங்களுக்கும் சமூக வாழ்வுக்கும் பெரிய அபாயம் ஏற்படுத்தும் என்றே கூறுகின்றனர்.

மன்னாரில் காற்றாலை திட்டம், நாட்டுக்குப் பசுமை மின்சாரம் வழங்கும் முன்னேற்றமான முயற்சியாக இருந்தாலும், அதன் சுற்றுச்சூழல், சமூக மற்றும் இயற்கை வாழ்வியல் விளைவுகள் புறக்கணிக்க முடியாதவை. மக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் கருத்துகளை பரிசீலித்து, விரிவான ஆய்வுகள் மேற்கொண்டு, நிலைத்துறையாக்கப்பட்ட திட்டத்துடன் மட்டுமே இதனை முன்னெடுக்க வேண்டும். இல்லையெனில், மன்னார் இயற்கை வளங்கள் அழியும் அபாயம் மட்டும் இல்லாமல், மக்கள் வாழ்வும் பாதிக்கப்படும் என்பது உறுதி.

மன்னாரில் காற்றாலை அமைக்கும் திட்டம் நாட்டுக்குத் தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் மின்சார பாதுகாப்பை வழங்கும் வாய்ப்பு கொண்டதாக இருந்தாலும், அதன் நிலைத்துறையாக்கப்பட்ட செயல்முறை இல்லாமல் அமுல்படுத்தப்பட்டால், இயற்கை வளங்களுக்கும் மக்கள் வாழ்வுக்கும் அபாயமாக அமையும். எனவே, மக்கள் கருத்துகளை பூரணமாகக் கருத்தில் கொண்டு, சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதிப்புகளை மதிப்பீடு செய்த பின்னரே திட்டத்தை முன்னெடுத்தல் அவசியம்.



**தவநேசன் தனுசன்,**
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.





# தாண்டியடியில் காட்டு யானைகள் தென்னை மரங்களை அழித்தன

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேச தாண்டியடி உமிரி பிரதேசம் அண்மைக் காலமாகக் காட்டு யானைகளின் பாரிய அட்டகாசத்துக்கு இலக்காகி வருகிறது.

அவை அங்குள்ள பெறுமதி வாய்ந்த நூற்றுக்கணக்கான தென்னைகளின் குருத்தை உண்டு அழித்துள்ளன.

இதனால் பல நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் மற்றும் தென்னம் பிள்ளைகள் குருத்தின்றி அடியோடு சாய்ந்து கிடக்கின்றன.

தேங்காய்களுக்கு நிலவும் தட்டுப்பாடுக்கு மத்தியில் இவ்வாறு வீணாகத் தென்னை மரங்கள் அளிக்கப்பட்டு வருவதையிட்டு தோட்டக்காரர்கள் கவலையும் விரக்தியும் அடைந்துள்ளனர்.

அங்குள்ள தோட்டங்கள் காணிகளுக்கு தினமும் பகல் இரவு வேளைகளில் காட்டு யானைகள் கூட்டம் கூட்டமாகத் தொடர்ச்சியாக வருகிறது .

வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் வந்து விரட்டினாலும் மீண்டும் யானைகள் வந்து பயிர்களை அழித்து வருகின்றன.

யானைகளை விரட்ட முற்பட்ட பொது மக்களை அவை தாக்கியும் வருகின்றன. இந்த வருடத்தில் மட்டும் அந்தப் பகுதியில் மூவர் யானையால் கொல்லப்பட்டுள்ளனர்.

தென்னைகளின் பாதுகாப்பு அதை வெட்டுவதற்கு இட்ட புதிய சட்டம் எல்லாம் புதிய அரசால் முன்னெடுக்கப்பட்டு வருவது தெரிந்ததே. எனினும் இந்தப் பகுதியில் அவை அமுலில் இல்லையா? என்ற கேள்வியும் எழுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவாக கவனத்தில் கொண்டு தென்னை களையும் பயிர் பச்சைகளையும் மக்களையும் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகமாகப் பதவி உயர்வு!

மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகமாகக் காரைநகர் களபூமியை சேர்ந்த தர்மலிங்கம் லோகநாதன் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

சுங்க சேவையில் பதவி வழி உத்தியோகத்தர் அடையக்கூடிய ஆகக்கூடிய பதவி இது என்பது குறிப்பிடத்தக்கது.

1992 ஆம் ஆண்டு நடந்த போட்டிப் பரீட்சையில் தெரிவாகி, 1993 ஆம் ஆண்டு உதவி சுங்க அத்தியட்சராக நியமனம் பெற்ற லோகநாதன், 2016 ஆம் ஆண்டு சுங்க அத்தியட்சராகவும் 2024 ஆம் ஆண்டு சுங்கப்பணிப்பாளராகவும் பதவி உயர்வு பெற்றார்.



இவர், 1991 ஆம் ஆண்டு விஞ்ஞானமானி பட்டத்தை யாழ். பல்கலைக்கழகத்திலும் 2009 ஆம் ஆண்டு முதுகலைமானிப் பட்டத்தை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திலும் பெற்றார். இவர் சுங்கத்திணைக்கள இந்து ஊழியர் சங்கத்தின் தலைவரும் சுங்க மேற்பார்வை உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவரும் ஆவார்.

இவர் காரைநகர் களபூமியை சேர்ந்த அமரர் தர்மலிங்கம் (இளைப்பாறிய சிரேஷ்ட வரி மதிப்பாளர்–இறைவரி திணைக்களம்) மற்றும் அமரர் திலகவதியின் சிரேஷ்ட புதல்வன் ஆவார்.








# மழைகாலத்து விருந்தினர்கள்...!

"உறிது நாள் கொண்டன்றே கார்காலம்வந்தன்று..." என சங்க காலத்தில் இலக்கியப் பாடல்களில் கார்காலம் பற்றி அழகாக வர்ணிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். சங்க காலத்திலேயே கார்காலத்தினுடைய முக்கியத்துவம் அதிக அளவில் போற்றப்பட்டது. தலைவன் தலைவியிடம் கார்காலத்தில் வருவதாக கூறி சென்ற தலைவன் கார்காலம் வந்தும் தலைவன் வரவில்லை என்று தலைவி தலைவனை நினைத்து துன்புறுவதாக பாடல்களில் அதிகளவில் கார்காலம் பற்றிய வருகை பயன்படுத்தப்பட்டுள்ளது. இசைவாத்தியகாரர்கள் சம்பளம் இல்லாமல் எப்போதும் வாசித்துக் கொண்டிருப்பார்கள் என்றால் இக் காலப் பகுதியிலேயே. காலங்களிலே மிக அழகான காலம் கார்காலம் என கூறலாம். இதனை இளவேனிற்காலம், மாரிகாலம், மழை காலம் என்ற பெயர்களால் அழைக்கப்படும்.

இலங்கைக்கு பிரதானமாக தென்மேற்கு பருவமழை, மற்றும் வடகிழக்கு பருவமழை காரணமாக மழை கிடைக்கின்றது. இப்போது தென்மேற்கு பருவ மழை காரணமாக மே முதல் செப்ரெம்பர் வரையான காலப் பகுதியில் தென்மேற்கு பகுதியில் குறிப்பாக மேற்கு, தெற்கு, மத்திய மலை பிரதேசங்கள், வடமேற்கு பகுதிகளில் அதிகளவிலான மழை கிடைக்கப் பெறுகின்றது.

காலநிலை மாற்றம் என்பது தவிர்க்க முடியாத மாற்றம் ஆகும். இதனால் மனிதர்களும், விலங்குகளும் ஏனைய உயிரினங்களதும் இயல்பான வாழ்க்கைச் சூழல் மாற்றம் அடைகின்றது. மனிதர்களை பொறுத்த வரையில் வேலைக்குச் செல்வது, போக்குவரத்து தடைபடுதல், அவர்களின் உணவு பழக்க வழக்கங்கள் மாற்றமடைதல், உடல்நிலை குறைபாடுகள் ஏற்படுதல், நோய் தொற்றுக்கு உள்ளாகுதல், விபத்துகளில் சிக்குதல் முக்கியமாக மழைகாலத்தில் மனிதர்களின் வாழ்விடங்களில் சிறிய உயிரினங்கள் தெரிந்தும் தெரியாமலும் உள் நுழைதல் போன்றவற்றை எதிர் கொள்கின்றனர்.

மழைக்காலத்தில் மனிதர்கள் எதிர்கொள்ளுகின்ற ஒரு முக்கிய பிரச்சினையாக அவர்களின் வாழ்விடத்தில் புதிய உயிரினங்களின் வருகையே. இவ்வாறு மழை காலத்தில் மனிதர்களின் வீடுகளுக்குள் கொசு (Mosquito),எலி (Rat),உழுவான், ஈசல், ஈச்சம் வண்டு, அகிலான், ஆமை, சக்கரபாண்டி அறணை,அட்டை, பாம்பு, நண்டு, பூரான் (Scorpion),தவளை(Frog), மண்புழு (Earthworm), நத்தை என பல விருந்தினர்கள் வருகின்றனர்.

விரும்பியோ விரும்பாமலோ வீடுகளுக்குள் வருவதற்கான காரணங்களை பார்க்கின்றபோது, நிலத்தினில் வாழும் மண்புழு போன்ற உயிரினங்களுக்கு மண்ணில் உள்ள துவாரங்களின் ஊடாக சுவாசம் கிடைக்கப்பெறும் மழை காலத்தில் அதிகளவிலான மழை நீர் காரணமாக மண்ணின் உடைய இடைவெளிகள் மூடப்பட்டு விடுவதால் மண்வாழ் உயிரினங்களுக்கு சுவாசம் பெறமுடியாமல் போவதால் மண்புழு, நண்டு,உழுவன் போன்றன நிலத்தின் மேற்பரப்புக்கு வருகின்றன. தென்னி, பனை ஏனைய மரங்களின் பட்டைகளில் வாழும் பூரான், அட்டை ,அறணை போன்ற உயிரினங்கள் வாழ்விடத்தில் வாழ முடியாமல் இதமான வெப்ப நிலையை தேடி மனிதர்களின் வாழ்விடத்துக்கு வருகின்றன. மழை நீர் அதிகம் பரவி நிற்பதனால் நீர் பாம்புகள்,ஆமைகள் போன்ற உயிரினங்கள் மனிதர்களின் கண்களுக்கு இரவு, பகல் பொழுதுகளில் தென்படுகின்றன. மண் புழுக்கள் வெளியில் தெரியும் போது தவளைகள் பறவைகள் அவற்றிற்கான இரையை தேடி வருகை தரும். பாம்பு, பூச்சிகள் வீட்டுக்குள் நுழைவதோடு படுக்கை, ஆடைகளுக்குள், வீட்டின் கூரைக்குள், பாத்திரங்களுக்குள், புத்தகங்களுக்குள் என மறைந்து வாழ்கின்றன. இவ்வாறு தமக்கான உணவிற்காகவும், இதமான வெப்பத்திற்காகவும்,பாதுகாப்புக்காக மனிதர்களின் வாழ்விடத்தை நாடுகின்றன.

மழைகாலத்தில் மனிதர்களுக்கு முக்கியமான பிரச்சினையாக நுளம்பு காணப்படுகின்றது. இவை சுத்தமான நீர், தேங்கி நிற்கும் நீர் ஆறுகளின் ஓரங்களில், பூந்தொட்டி, மண்பாண்டம், நீர் சேமிக்கும் தொட்டி, வடிகால், தாவர இலைகள், மரப்பொந்து, சிரட்டை, பொலுத்தின், பிளாஸ்டிக் போத்தல் போன்றவற்றில் நீர் தேங்கி இருக்கின்ற பட்சத்தில் அவற்றில் தமது இனப்பெருக்கத்தை செய்து கொண்டு மனிதர்களை பதம் பார்க்கின்றது. இவற்றிற்கு ஏற்ற சூழல் கிடைப்பதால் முட்டை, இள உயிர், கூட்டு புழு என மூன்று வாழ்க்கை நிலையை பூர்த்தி செய்து கொள்கின்றது.

இவற்றால் எவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படுகின்றது எனப் பார்க்கின்றபோது வீட்டுக்குள் வருகின்ற பாம்பு, பூரான் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக மனிதர்களை தீண்டுவதோடு உயிர் பயத்தை ஏற்படுத்துகின்றன.

நுளம்பால் டெங்கு காய்ச்சல் (Dengue fever), சிக்கன் குனியா (Chikunguniya), மலேரியா (Malaria) போன்ற

தொடர்ச்சி▼



# மழைகாலத்து விருந்தினர்கள்...!

**தொடர்ச்சி▲**

வற்றை பெற்றுக்கொள்கின்றனர். மண்புழுக்கள், அட்டை மற்றும் கரப்பான் பூச்சி போன்றன மனிதர்களுக்கு அருவருப்பை ஊட்டுகின்றன, ஒவ்வாமையை ஏற்படுத்துகின்றன. எலி வீட்டில் உள்ள சாப்பாடுகளில் சிறுநீர் கழித்தலால் ஒவ்வாமை ஏற்படுவதோடு பல நோய்களும் ஏற்படுகின்றன. ஈக்கள் கரப்பான் பூச்சிகள் காலரா (Cholera), வயிற்றுப்போக்கு (Diarrhea), லெஸ் டோஸ்பைரோசிஸ் (Leptospirosis) போன்றவற்றை ஏற்படுத்துகின்றன. நத்தை, புழுக்கள் தாவரங்களை சேதப்படுத்துகின்றன. எறும்பு, பூச்சியினங்கள் இரவில் மனிதர்களின் காதுகளுக்குள் நுழைவதால் வேதனைப் படுவதோடு அவர்களின் தூக்கமும் இல்லாமல் போகின்றது. சில பூச்சிகள் துர்நாற்றம் அடித்தல் மற்றும் தோலில் அரிப்பை உண்டாக்குகின்றன. இவ்வாறான பாதிப்பை ஏற்படுத்துகின்றனர்.

இவற்றின் வருகை தவிர்க்க முடியாத ஒன்றாக இருப்பினும் அவற்றிலிருந்து எம்மை நாம் பாதுகாத்துக் கொள்வது அவசியம். வீட்டில் உள்ள துவாரங்களை துணி வைத்து அடைத்தல், ஒவ்வொரு நாளும் வீட்டை நன்றாக துப்புரவு செய்தல், படுக்கையை உதறி பார்த்து விட்டு தூங்க செல்லல், கதவுகளுக்கு கீழ் உள்ள இடைவெளிகளில் துணிகளை வைத்து அடைத்தல், நுளம்பு வலையை கட்டி விட்டு நித்திரைக்குசெல்லுதல், சிறுவர்களை கவனமாகப் பார்த்துக்கொள்ளல். இவற்றைக் கவனமாகச் செய்கின்றபோது அவற்றின் பாதிப்பில் இருந்து விடுபடலாம்.

பருவ கால மாற்றம் என்பது தவிர்க்க முடியாததும் அவசியமானதுமாகும். எம்மை போலவே விலங்கினது வாழ்விடமும் அவற்றினுடைய வாழ்க்கை முறையும் பாதிப்படைந்துள்ளது. நாம் விழிப்புணர்வாக இருக்க வேண்டும்.



**செ.அனுத்திரா,**
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.





# இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் வடக்கு மாகாண ஆளுநருடன் சந்திப்பு!

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பிலான முன்மொழிவு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.

அத்துடன் ஆசிரிய ஆளணிச் சீராக்கம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. ஆசிரியர்கள் தொடர்பான தரவுகள் அதிகாரிகளிடம் இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படாமை பல்வேறு பிரச்சினைகளுக்கு காரணமாக இருக்கின்றது என்றும் ஆசிரிய சங்கத்தால் சுட்டிக்காட்டப்பட்டது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றம் தொடர்பிலும் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.








# முல்லைத்தீவு வைத்தியசாலையின் குறைபாடுகள் தொடர்பில் ஆராய்வு!

## ரவிகரன் எம்.பி. நேரில் சென்று நடவடிக்கை

(பா.சதீசன் )

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் விஜயமொன்றை மேற்கொண்டு வைத்தியசாலையில் நிலவும் வளப்பற்றாக்குறைகள் மற்றும் அண்மையில் இடம்பெற்ற பெண்ணொருவரின் சர்ச்சைக்குரிய மரணம் தொடர்பிலும் நிலைமைகளைக் கேட்டறிந்துகொண்டார்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் பாலசுப்பிரமணியம் தனஞ்சயன் மற்றும் வைத்தியசாலையின் நலன்புரிச் சங்க நிர்வாகத்தினருடனேயே நாடாளுமன்ற உறுப்பினர் கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தார்.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையில் சிறுநீரக வைத்தியநிபுணர், நுண்ணுயிரியல் மருத்துவர், நரம்பியல் நிபுணர் உள்ளிட்ட வைத்திய நிபுணர்கள் இல்லாத நிலை காணப்படுவதால் தம்மால் வினைத்திறனான வைத்தியசேவைகளைத் வழங்க முடியாதுள்ளது என்று இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்தோடு பெண்நோயியல் வைத்திய நிபுணர் மற்றும் குழந்தைநல மருத்துவ நிபுணர் தலா ஒவ்வொருவரே காணப்படுகின்றனர் என்றும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

அதிலும் குறிப்பாகக் குழந்தைநல மருத்துவ நிபுணராக முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் தற்போது பணியாற்றிவருபவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும் அதற்குப் பதிலீடாக நியமிக்கப்பட்ட குழந்தைநல மருத்துவர் மகப்பேற்று விடுமுறையில் இருப்பதால் தற்போது கடமையில் ஈடுபட்டிருக்கும் குழந்தைநல மருத்துவரை இதுவரை விடுவிப்புச் செய்யாமல் வைத்திருப்பதாகவும், பதிலீட்டுக் குழந்தைநல மருத்துவர் கடமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னரே தற்போது கடமையிலுள்ள குழந்தைநல மருத்துவர் இடமாற்றத்துக்குத் தம்மால் அனுமதிக்கப்படுவார் எனவும் வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளரால் இதன்போது தெளிவுபடுத்தப்பட்டது.

அதேவேளை, சட்டவைத்திய அதிகாரியும் தற்போது இல்லாதநிலை காணப்படுவதால் மரண விசாரணைகள் மற்றும் உடற்கூற்றுப் பரிசோதனை உள்ளிட்ட விடயங்களைக் கையாள்வதில் பல்வேறு இடர்களுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுதவிர முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையில் சீரி ஸ்கானர் இல்லாத நிலை காணப்படுவதால் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்று இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் எடுத்துக்கூறப்பட்டது. அதேபோல் நீண்டகாலப் பயன்பாட்டில் உள்ள நோயாளர் காவு வண்டிகளே தற் போதும் பயன்பாட்டில் உள்ளதால் திடீர் பழுதடைதல் உள்ளிட்ட சிக்கல் நிலைகள் காணப்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நிலையில் இதன்போது அண்மையில் இடம்பெற்ற பெண்ணின் சர்ச்சைக்கு உரிய மரணம் தொடர்பிலும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பினார். குறித்த விவகாரம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று வைத்திசாலைப் பிரதிப்பணிப்பாளரால் பதிலளிக்கப்பட்டது. குறித்த விசாரணைகள் முடிவடைந்தவுடன் விசாரணை அறிக்கையின் பிரதிகளைத் தமக்கும் கையளிக்குமாறு இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரால் கோரப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் நிலவும் மருத்துவ நிபுணர்கள் பற்றாக்குறை தொடர்பிலும், நோயாளர் விடுதி பற்றாக்குறை தொடர்பிலும் ஏற்கனவே சுகாதார அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. குறித்த பற்றாக்குறைகளை தீர்க்குமாறு சுகாதார அமைச்சரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது என்று இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார்.

ஏனைய பிரச்சினைகள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.




# மன்னார் கட்டுக்கரை குளத்தின் கீழான பெரும் போக முன்னோடிக் கூட்டம்

(மன்னார் நிருபர்)

கட்டுக்கரை குளத்தின் கீழான 2025 – 2026 ஆம் ஆண்டுக்கான பெரும்போக பயிர்ச்செய்கை முன்னோடிக் கூட்டமானது மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் தலைமையில் இன்று புதன்கிழமை (22) காலை மன்னார் உயிலங்குளத்தில் இடம் பெற்றது.

இதன் போது விவசாய அமைச்சு ஊடாக 4 வீத வட்டியுடனான கடன் தொடர்பான விழிப்புணர்வு மாவட்ட விவசாய பணிப்பாளரால் எடுத்துரைக்கப்பட்டது .

விவசாய கடன் வழங்கும் திட்டம் தொடர்பான விளக்கங்கள் வங்கிகள் அலுவலர்கள் மூலம் சாதகமான முறையில் வழங்கப்பட்டது.


நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் போதுமான அளவு நீர் கிடைக்க பெற்று வருகிறது என்பதை உறுதி செய்ததுடன் சாதகமான நிலை உள்ளதையும் உறுதிப் படுத்தினர்.

விவசாய கடன் திட்டத்தில் முதல் கட்டமாக நான்கு விவசாயிகளுக்கு மக்கள் வங்கியின் மன்னார் கிளை ஊடாகக் காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

கமநல காப்புறுதி சபையின் காப்புறுதி நடவடிக்கைகள் தொடர்பான விளக்கங்கள் உதவி பணிப்பாளர் ஊடாக வழங்கப் பட்டன.

குறித்த கூட்டத்தில் மேலதிக மாவட்ட செயலாளர் காணி, மாவட்ட விவசாயப் பணிப்பாளர், நானாட்டான், மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர்கள், மன்னார் நகரம், மாந்தை மேற்கு உதவி பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்ட செயலாளர், கமநல காப்புறுதி சபை உதவி பணிப்பாளர், மன்னார் நீர்ப்பாசனப் பணிப்பாளர், விவசாய திட்ட முகாமையாளர் மற்றும் தலைவர், முருங்கன் பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர், மன்னார் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர், உயிலங்குளம் பிரதி விவசாயப் பணிப்பாளர், கால்நடை அபிவிருத்தி திணைக்கள பிரதிப் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர், வங்கிகள் அலுவலர்கள், கமத்தொழில் காப்புறுதி சபை, திட்ட முகாமைத்துவக் குழு அங்கத்தவர்கள், விவசாய அமைப்புகளின் அங்கத்தினர்கள், விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



# மும்பையில் அடுக்குமாடிக் குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் நால்வர் உயிரிழப்பு

மும்பை அடுக்குமாடி குடியிருப்பு தீப்பிடித்ததில் 6 வயது சிறுமி உள்பட 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

நவி மும்பையில் பிரதான பகுதியில் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றின் 10 ஆவது தளம் திடீரென தீப்பிடித்ததுடன் 11 மற்றும் 12ம் தளத்துக்கும் தீ வேகமாக பரவியுள்ளது.

இந்த விபத்தில் 4 பேர் உயிரிழந்ததுடன் 10 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவத்தை அடுத்து உடனடியாக அவ்விடத்திற்கு சென்ற தீயணைப்பு படையினர் தீயை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டதுடன் உயிரிழந்தவர்களின் உடல்களையும் காயமடைந்தவர்களை மீட்டுள்ளனர்.

இதேவேளை, தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், மின்கசிவு கோளாறால் இந்த சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

# இஸ்ரேலியப் பிரதமருக்கு நன்றி தெரிவித்தார் மோடி




தீபாவளி பண்டிகையை முன்னிட்டு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் வாழ்த்துக்களுக்கு பிரதமர் மோடி நன்றி தெரிவித்தார்.

மேலும், இஸ்ரேல் பிரதமரின் பிறந்த நாளுக்கு தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

இதேவேளை, உங்களுக்கு நல்ல ஆரோக்கியம் மற்றும் வெற்றியை வாழ்த்துகிறேன் எனவும் வரும் ஆண்டுகளில் இந்தியா – இஸ்ரேல் இடையே உறவு செழிக்கட்டும் என்றும் பிரதமர் மோடி கூறியுள்ளார்.



# உலகின் மாசுபட்ட நகரங்களில் முதலாவது இடம்பெற்ற டில்லி

உலகின் மாசுபட்ட நகரங்கள் பட்டியலில் டில்லி முதலிடத்தில் உள்ளது.

சுவிஸ் காற்று தர தொழில்நுட்ப நிறுவனமான ஐ.கியூ.ஏர்-ன் உலக காற்று தர அறிக்கை 2025 தற்போது வெளியாகி உள்ளது. இந்தப் பட்டியலில் நம் நாட்டின் தலைநகரமான டில்லி முதலிடத்தைப் பிடித்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி டில்லியின் காற்று தரக் குறியீடு (ஏ.கியூ.ஐ) 350 ஆக உள்ளது.

இதன்மூலம் உலகில் மிகவும் மோசமாக மாசுபட்ட நகரங்கள் பட்டியலில் முதலிடத்தை டில்லி மாநகரம் பிடித்துள்ளது. இந்தியாவில் காற்று மாசுபாடு கடுமையான சுகாதார அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. இதனால், இந்தியர்களின் ஆயுள் காலம் 5.2 ஆண்டுகள் குறைகிறது என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோல் இந்தப் பட்டியலில் மும்பை 5ஆவது இடத்தையும், கொல்கத்தா 8ஆவது இடத்தையும் பிடித்துள்ளது. இந்தப் பட்டியலில் பாகிஸ்தானின் லாகூர் 2 ஆவது இடத்தையும், கராச்சி 4 ஆவது இடத்தையும் பெற்றுள்ளது.


# சென்னையில் கடந்த 3 நாள்களில் 226 தொன் பட்டாசுக் கழிவு அகற்றம்



தீபாவளிப் பண்டிகையை அடுத்து சென்னை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த 3 நாள்களில் 225.87 தொன் பட்டாசு கழிவு அகற்றப்பட்டுள்ளதாக சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

நடப்பு ஆண்டு தீபாவளிப் பண்டிகைக்கு வழக்கத்தை விட தமிழகத்தில் அதிகளவில் பட்டாசு விற்பனை நடந்துள்ளதாக பட்டாசு விற்பனையாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதை உறுதிப்படுத்தும் வகையில் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் பட்டாசு வெடித்து சென்னை மக்கள் இந்த தீபாவளியை மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கொண்டாடியுள்ளனர்.

அந்த வகையில் கடந்த 19, 20, 21 ஆகிய திகதிகளில் சென்னை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் மட்டும் 225.87 தொன் பட்டாசு கழிவுகளை சேகரித்து, அவற்றை பதப்படுத்தி அழிப்பதற்காக கும்மிடிப்பூண்டி மையத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாக மாநகராட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# ரஷ்ய ஜனாதிபதி புடின் கைது செய்யப்படுவார்

## போலந்து கடும் எச்சரிக்கை

ஹங்கேரிக்கு செல்லும் வழியில், ரஷ்ய ஜனாதிபதி புடின் தங்கள் நாட்டு வான்வெளி வழியாக பறந்தால் கைது செய்யப்படுவார் என போலந்து கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புடன் ஹங்கேரியில் நடைபெறும் உச்சி மாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி புடின் பங்கேற்க இருக்கிறார். அப்போது இரு நாட்டுத் தலைவர்களும் உக்ரைன் உடனான போரை முடிவுக்கு கொண்டு வருவது குறித்து முக்கிய பேச்சு நடத்த இருக்கின்றனர்.

இந்த சூழலில், ஹங்கேரியில் நடைபெறும் உச்சிமாநாட்டிற்காக தனது வான்வெளி வழியாக ரஷ்ய ஜாதிபதி புடின் பயணிக்க கூடாது என்று போலந்து எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து, போலந்து வெளியுறவு அமைச்சர் ராடோஸ்லாவ் சிகோர்ஸ்கி குறிப்பிடுகையில்,

“ஹங்கேரிக்கு செல்லும் வழியில் புடின் எமது வான்வெளியை பயன்படுத்தக் கூடாது. மீறி பயன்படுத்தினால், சர்வதேச கைது பிடியாணையை நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் ஏற்படும். அவர் கைது செய்யப்படுவார்.

இந்த உச்சிமாநாடு நடைபெற வேண்டுமானால், விமானம் வேறு பாதையைப் பயன்படுத்தும் என்று நம்புகிறோம். தாக்குதல்கள் தொடர்வதால், புடினின் விமானம் தரையிறக்கப்படலாம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனில் ரஷ்யா தொடர்ந்து ட்ரோன் தாக்குதல் நடத்தி வருகிறது. போலந்து வான்வெளியில் அத்துமீறி நுழைந்த ரஷ்ய ட்ரோன்களை அந்நாட்டு ராணுவம் சுட்டு வீழ்த்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

# தொழிலாளர்களுக்கான புலம்பெயர் விதிகளில் மாற்றங்களைக் கொண்டு வரும் பிரித்தானியா

வெளிநாட்டு மாணவர்கள் மற்றும் வெளிநாட்டு தொழிலாளர்களுக்கான புலம்பெயர்வு விதிகளில் பாரிய மாற்றங்களை பிரித்தானியா அறிவித்துள்ளது.

பிரித்தானிய அரசு 2025 குடிவரவு வெள்ளை ஆவணத்தின் கீழ், சர்வதேச மாணவர்கள் மற்றும் வெளிநாட்டு தொழிலாளர்களுக்கான விசா மற்றும் புலம்பெயர்வு விதிகளில் முக்கிய மாற்றங்களை அறிவித்துள்ளது.

இந்த மாற்றங்கள் 2026 ஜனவரி முதல் நடைமுறைக்கு வரும். முக்கியமாக, Skilled Worker, Scale-up மற்றும் High Potential Individual விசாக்களுக்கு ஆங்கில மொழி திறன் தேவைகள் B1 நிலையிலிருந்து B2 நிலைக்கு உயர்த்தப்படுகின்றன.

இது A-Level தரத்திற்கு சமமானதாகும். மேலும், Graduate Visa காலம் 2027 ஜனவரி 1 முதல் 18 மாதங்களாக குறைக்கப்படுகிறது. PhD முடித்தவர்களுக்கு மட்டும் 36 மாதங்கள் வழங்கப்படும். 2025 ஜூலை 22 முதல், Skilled Worker விசா பெற தகுதியான வேலை பட்டியல் குறைக்கப்பட்டுள்ளது.




Social Care Workers ஆகியோருக்கான வெளிநாட்டு ஆட்சேர்ப்பு முடிவுக்கு வந்துள்ளது. இதனால், போக்குவரத்து, பல் மருத்துவம் மற்றும் சிறைத் துறைகளில் உள்ள Graduate Visa வைத்துள்ளவர்கள் பாதிக்கப்படலாம். High Potential Individual வழியில் விண்ணப்பிக்க தகுதியான பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்படவுள்ளது.

ஆண்டுக்கு 8,000 விண்ணப்பங்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். Global Talent மற்றும் High Potential வழிகளில் சில சலுகைகள் நவம்பர் 2025 முதல் நடைமுறைக்கு வரும்.

நிரந்தர வதிவிடத்திற்கான நிலையான தகுதி காலம் 5 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகளாக உயர்த்தப்பட உள்ளது. ஆனால், சமூக பங்களிப்பு, வேலை, வரிவிதிப்பு, குற்றப் பதிவில்லாத நிலை போன்ற அடிப்படையில் சிலர் விரைவாக தகுதி பெறலாம்.

இந்த மாற்றங்கள், குறைந்த மற்றும் நடுத்தர திறன் கொண்ட தொழிலாளர்களுக்கான வாய்ப்புகளை குறைக்கும் போதிலும், உயர் திறன் கொண்ட நிபுணர்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பக்கங்கள் - 03

# கனடா முரசு

புதன்கிழமை 22/10/2025

## கனடிய எதிர்க்கட்சித் தலைவர் மன்னிப்புக் கோர வேண்டும்

### சபாநாயகர் வலியுறுத்தல்



C2▸



# மோசடிகளைத் தடுக்க புதிய வங்கி விதிகள்

## கனடா அரசு அறிவிப்பு

கனடாவின் மத்திய அரசாங்கம், வங்கிகள் மோசடிகளை கண்டறிந்து தடுக்கும் புதிய கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உருவாக்க வேண்டும் எனத் திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

புதிய சட்ட திருத்தங்கள் அமல்படுத்தப்பட்டால், வங்கிகள் கணக்குதாரர்களின் வெளிப்படையான சம்மதத்தைப் பெற்ற பிறகே சில பணமாற்று அல்லது கட்டண வசதிகளை இயக்க முடியும்.

C2▸

# வதிவிட விண்ணப்பதாரர்களுக்கு கனடாவில் புதிய வசதி அறிமுகம்

கனேடிய குடியுரிமை மற்றும் நிரந்தர வதிவிடம் விண்ணப்பதாரர்களுக்கான தனிப்பயன் செயலாக்க நேரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கனடாவின் புலம்பெயர்வு, அகதிகள் மற்றும் குடியுரிமைத் துறை தனது இணைய செயலாக்க கருவியை மேம்படுத்தியுள்ளது.

இதன் மூலம், கனேடிய நிரந்தர வதிவிடம் மற்றும் குடியுரிமை விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்ப நிலையை மேலும் தெளிவாக அறிய முடியும்.

இப்போது, விண்ணப்பதாரர்கள் தாங்கள் விண்ணப்பித்த திகதி மற்றும் விண்ணப்பத்தின் நிலையை அடிப்படையாகக் கொண்டு, தனிப்பயனான செயலாக்க நேரத்தை காண முடியும்.

முன்பு, விண்ணப்ப வகை மற்றும் திட்டத்தின் அடிப்படையில் சராசரி செயலாக்க நேரம் மட்டுமே வழங்கப்




பட்டு வந்தது.

ஆனால் தற்போது, Atlantic Immigration Program, Canadian Experience Class, Federal Skilled Worker Program, Provincial Nominee Program, Self-Employed Persons Program, Quebec Business Class kw;Wk; Start-up Visa Program போன்ற திட்டங்களுக்கு விண்ணப்பித்தவர்கள் தங்களுக்குமுன் எத்தனை பேர் உள்ளனர், மொத்தமாக எத்தனை பேர் காத்திருக்கின்றனர் என்பதையும் காண முடிகிறது.

இந்த புதிய கருவியில் 2 முக்கியமான கேள்விகள் சேர்க்கப்பட்டுள்ளன. “நீங்கள் ஏற்கனவே விண்ணப்பித்துள்ளீர்களா?” மற்றும் “எப்போது விண்ணப்பித்தீர்கள்?” என்பவை.

உதாரணமாக, 2025 ஜனவரியில் CEC திட்டத்தில் விண்ணப்பித்த ஒருவர், தங்களுக்கு முன் சுமார் 3,000 பேர் உள்ளனர் என்றும், மொத்தமாக 17,900 பேர் முடிவுக்காக காத்திருக்கின்றனர் என்றும் காணலாம்.

இந்த மேம்பாடு, விண்ணப்பதாரர்களுக்கு தங்களது நிலையை தெளிவாக புரிந்து கொள்ள உதவுவதுடன், எதிர்பார்ப்புகளை நன்கு நிர்வகிக்கவும் வழிவகுக்கிறது. இது கனடாவின் புலம்பெயர்வு முறையில் ஒரு முக்கிய முன்னேற்றமாக பார்க்கப்படுகின்றது.



# கனடிய எதிர்க்கட்சித் தலைவர் மன்னிப்புக் கோர வேண்டும்

## சபாநாயகர் வலியுறுத்தல்



கனடிய எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொலிவ்ரே அண்மையில் கனடிய பொலிஸார் குறித்து தெரிவித்த கருத்துகளுக்கு நாடாளுமன்றத்தில் மன்னிப்பு கேட்க வேண்டும் என சபாநாயகர் ஸ்டீவன் மேக்கின்னன் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த வாரம் வெளியான ஒரு யூடியூப் நேர்காணலில், கன்சர்வேட்டிவ் தலைவர் பொலிவ்ரே, கனடிய பொலிஸ் தலைமை அவமானகரமானது என்றும், முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை காப்பாற்ற முயன்றதாகவும் குற்றம் சாட்டினார்.

ட்ரூடோ பதவி வகித்த காலத்தில் விடுமுறைக்காக சென்ற பயணங்கள் தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ளதாகத் பொலிவ்ரே குற்றம் சுமத்தியுள்ளார்.

குறிப்பாக 2016 ஆம் ஆண்டு நடந்த ஆகா கான் விவகாரத்தை சுட்டிக்காட்டியதுடன் அதற்காக ட்ரூடோவை சிறையில் அடைந்திருக்க வேண்டுமென தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொலிவ்ரேவின் குற்றச்சாட்டை மறுத்து அந்த சம்பவத்தில் கனடிய குற்றச் சட்டத்தின் கீழ் எந்த குற்றமும் இல்லை என பசுமைக் கட்சி தலைவர் எலிசபெத் மே, விளக்கமளித்துள்ளார்.

பொலிவ்ரேவின் கருத்துகள் நீதித்துறை மற்றும் பொலிஸாரின் சுயாதீனத்தை கேள்விக்குறியாக்குவதாக சபாநாயகர் மேக்கின்னன் என தெரிவித்தார்.

ஆனால், பொலிவ்ரே நாடாளுமன்றத்தில் மன்னிப்பு கேட்கவில்லை. பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில், அவரது பேச்சாளர், “அந்த கருத்துக்கள் முன்னாள் பொலிஸ் ஆணையாளர் பிரெண்டா லக்கி குறித்து மட்டுமே கூறப்பட்டவை” என்று விளக்கம் அளித்தார்.

இந்த விவகாரம் கனடா அரசியலில் புதிய சர்ச்சையை எழுப்பியுள்ளது, குறிப்பாக சட்ட அமலாக்க அமைப்பின் சுயாதீனம் மீதான மரியாதை குறித்த விவாதங்களை மீண்டும் முன்னிறுத்தியுள்ளது.

---

**மோசடிகளை...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மோசடியாளர்கள் இவ்வசதிகளைப் பயன்படுத்தி பணத்தை திருடும் சம்பவங்களை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கணக்குதாரர்கள் தாங்கள் விரும்பாத வசதிகளை முடக்கவும், பரிமாற்ற வரம்புகளை மாற்றி தங்களது கணக்குகளை பாதுகாக்கவும் அனுமதி அளிக்கப்படும்.

அதேநேரத்தில், “பொருளாதார துஷ்பிரயோகம்” எனப்படும் ஒருவரின் பணம் அல்லது கடனுக்கான அணுகலை மற்றொருவர் துஷ்பிரயோகமாக கட்டுப்படுத்தும் நிலைகளைக் கையாள்வதற்காக, வங்கிகளுடன் இணைந்து புதிய “தன்னார்வ பொருளாதார துஷ்பிரயோகம் நடத்தை விதிமுறைகள்” உருவாக்கப்படும் என அரசு தெரிவித்துள்ளது.

மேலும், வரவிருக்கும் வசந்த காலத்திற்குள், பணமோசடி, ஆன்லைன் மோசடி, மற்றும் இணைய தந்திரங்கள் போன்றவற்றை விசாரிக்கவும், சட்ட விரோத வருவாயை மீட்டெடுக்கவும் “நிதி குற்றங்கள் அமைப்பு” ஒன்றை உருவாக்க சட்டம் கொண்டுவரப்படும் எனவும் லிபரல் அரசு அறிவித்துள்ளது.

இந்த அமைப்பை உருவாக்குவதாக 2021 தேர்தல் அறிக்கையில் லிபரல் கட்சி வாக்குறுதி அளித்திருந்தது.

# பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் விடுமுறை குறித்த சட்டத்தில் மாற்றம்



கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண அரசு, கடுமையான நோய் அல்லது காயம் காரணமாக வேலை செய்ய முடியாதவர்களுக்கு ஆண்டுக்கு 27 வாரங்கள் வரை ஊதியமில்லா விடுப்பு வழங்கும் வகையில் புதிய சட்ட மாற்றம் ஒன்றை முன்மொழிந்துள்ளது.

இந்த மாற்றம் வேலைவிதி சட்டத்தில் சேர்க்கப்படும் எனவும், சட்டம் நிறைவேறினால் இலையுதிர் காலம் முதல் நடைமுறைக்கு வரும் எனவும் மாகாண முதல்வர் டேவிட் எபி தெரிவித்துள்ளார்.

பெரும் நோயறிகுறி அல்லது பாரிய சுகாதார பிரச்சினையை எதிர்கொள்வது வாழ்க்கையில் மிகக் கடினமானது என எபி கூறினார்.

“ஆனால் சிகிச்சை முடித்து மீண்டும் வேலைக்கு திரும்பும் போது உங்கள் வேலை உங்களுக்காக காத்திருக்கும் என்பதில் உறுதியாக இருப்பது. அது ஒரு பெரும் மனநிம்மதியை அளிக்கும்,” என அவர் கூறினார்.


இந்த மாற்றம், கீமோதெரபி போன்ற சிகிச்சை பெறும் பணியாளர்கள் தங்களின் ஆரோக்கியத்தை கவனிக்கத் தேவையான நேரத்தை எடுத்துக்கொள்ளும் வகையில் பாதுகாப்பளிக்கும் என எபி கூறினார்.

மனித உரிமைச் சட்டம் ஊனமுற்றவர்களுக்கு எதிரான பாகுபாட்டை தடை செய்கிறது. ஆனால் தற்போதைய வேலைவிதி சட்டம் நீண்டகால நோய் அல்லது காயம் காரணமாக வேலை செய்ய முடியாதவர்களுக்கு வேலை பாதுகாப்பை அளிக்கவில்லை.

இப்போது அந்த பாதுகாப்பை சட்டத்தில் நேரடியாக சேர்க்கிறோம் என தொழிலாளர் அமைச்சர் ஜெனிஃபர் வைட்சைட் குறிப்பிட்டுள்ளார்.

கடுமையான நோயறிகுறி அல்லது வாழ்க்கையை மாற்றக்கூடிய சூழ்நிலையை எதிர்கொள்ளும் ஒருவருக்கு, தமது வேலை இழக்காது இருப்பார் என்ற உறுதி மிகுந்த நிம்மதியை அளிக்கிறது.

இது அவர்களின் மீட்பு பயணத்தில் தேவையற்ற மன அழுத்தத்தைக் குறைக்கும் என தெரிவித்துள்ளார்.




# பிரிட்டிஷ் கொலம்பியாவின் கடற்கரையில் நிலநடுக்கம்

பிரிட்டிஷ் கொலம்பியா கடற்கரைக்கு அருகே சிறிய நிலநடுக்கம் ஒன்று பதிவாகியுள்ளது.

ரிக்டர் அளவுகோலில் 3.1 அளவிலான இந்த நிலநடுக்கம் சிட்னி நகரின் வடக்கே சுமார் 13 கிலோ மீற்றர் தூரத்தில் ஏற்பட்டுள்ளது.

நிலநடுக்கம் 16 கிலோ மீற்றர் ஆழத்தில் நிகழ்ந்ததாகவும், கிரேட்டர் விக்டோரியா பிராந்தியத்தின் பல இடங்களில் லேசாக உணரப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதுவரை எந்தவித சேதமும் பதிவு செய்யப்படவில்லை என்றும், சேதங்கள் ஏற்படும் வாய்ப்பும் இல்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

5.4 அளவை விட குறைவான நில நடுக்கங்கள் பொதுவாக சேதத்தை ஏற்படுத்துவதில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.